TNTT080000722024

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்.
முன்னிலை: திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன், M.A., M.Phil., L.L.M.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்.
திருவள்ளுவராண்டு 2057–ம் வருடம் பங்குனித் திங்கள் 09 ம் நாள் திங்கட்கிழமை
2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் நாள் திங்கட்கிழமை
அசல் வழக்கு எண்.66/2024
**CNR.No. TNTT-08-000072-2024**

செய்யது அலி பாத்திமா ... வாதி

/எதிர்/

அப்துல்காதர் ... பிரதிவாதி

இவ்வழக்கில் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.தெ.வெங்கடாசலபதி அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தோன்றாத்தரப்பினர் ஆகியுள்ள நிலையிலும், இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று (23.03.2026) இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்....

**தீர்ப்புரை**

28.12.2011 ல் வாதிக்கும், பிரதிவாதிக்கும் நடைபெற்ற திருமண உறவை ரத்து செய்து முஸ்லீம் முறைப்படி குலா என்னும் திருமண முறிவை 11.09.2023 ல் வழங்கியது சட்டப்படியானது என விளம்புகை செய்யக் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வழக்குரை சுருக்கம்**

அ)வாதிக்கும், பிரதிவாதிக்கும் முஸ்லீம் மத வழக்கப்படி பெரியவர்கள் முன்னிலையில் கடந்த 28.12.2011 ல் செய்துங்கநல்லூர் மகாலெட்சுமி திருமண மஹாலில் வைத்து திருமணம் நடைபெற்றது. உபயவாதிகள் திருமணம் செய்துங்கநல்லூர் முகைதீன் ஆண்டவர் ஜாமியா பள்ளிவாசல் ஜமாத் நிக்காஹ் (திருமண) பதிவு புத்தகத்தில் பதிவு



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.23 18:39:04 +0530

செய்யப்பட்டுள்ளது. உபயவாதிகளின் திருமணத்தின் பயனாக 01.10.2012ம் தேதி முகம்மது இர்ஷாத் என்ற ஆண்குழந்தை பிறந்தது. பிரதிவாதி வேலைக்காக சவுதி அரேபியாக்கு சென்றுவிட்டு கடந்த 2013 மற்றும் 2014 ஆண்டுகளில் ஊருக்கு வந்திருந்த போது வாதியிடம் கணவன் என்ற முறையில் நடந்துக் கொள்ளாமல் வாதியை பிரதிவாதி புறக்கணித்து வந்தார். பிரதிவாதிக்கு வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு உள்ளதை அறிந்து அது பற்றி வாதி கேட்டதற்கு வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு உள்ளதை பிரதிவாதி ஒப்புக் கொண்டார்.

ஆ)வாதியிடம் பிரதிவாதி நேரில் பேசுவதையும், போனில் பேசுவதையும் நிறுத்திக் கொண்டார். மேற்படி பிரச்சனை குறித்து பிரதிவாதியின் குடும்பத்தாரிடம் வாதி முறையிட்ட போது வாதியை சற்று பொறுமையாக இருக்கும்படியும் பிரதிவாதி விரைவில் திருந்தி விடுவார் என்று பிரதிவாதியின் தாயார் கூறினார். பிரதிவாதியின் தாயாரின் வார்த்தையை நம்பி வாதி பொறுமையாக வாழ்ந்து வந்தார். கடந்த 2018ல் பிரதிவாதி வெளிநாட்டிலிருந்து ஊருக்கு திரும்பி வந்த போது வாதியை முழுமையாக புறக்கணித்து கடுமையான மன அழுத்தத்திற்கு உள்ளாக்கி விட்டார். 4 வருடங்கள் கடந்த பின்னர் பிரதிவாதியின் தாயாரிடம் வாதி கேட்டதற்கு மேற்படி பிரச்சனை வாதியின் பெற்றோருக்கு தெரிந்தது. அதனால் வாதி வேறு வழியில்லாமல் கடந்த 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் பிரதிவாதிக்கும் வேறு பெண்ணுடனான தொடர்பு உறவு குறித்து வாதியின் குடும்பத்தாருக்கு தெரிவிக்கப்பட்டது.

இ)23.02.2022ல் பிரதிவாதி வந்திருந்த போது உபயவாதிகளின் பெற்றோர்கள் பிரதிவாதிக்கு அறிவுரை கூறியதன் பேரில் மனம் திருந்தி விட்டதாகவும், வாதியுடன் இனி நல்லமுறையில் சேர்ந்து வாழ்வதாகவும் வாதியையும், குழந்தையையும் பிரதிவாதி 08.04.2022ல் வெளிநாட்டுக்கு அழைத்து சென்றார். ஆனால், வாதியை உதாசினப்படுத்தியதோடு அவமானப்படுத்தி வாதியுடன் திருமண வாழ்க்கையை வாழாமல் பிரதிவாதி புறக்கணித்து வந்தார். வாதியை பார்க்க அறுவறுப்பாக இருப்பதாக கூறி வாதியை கடும் மன உளைச்சலுக்கு ஆளாக்கினார். வாதியை மனதளவிலும்,



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.23 18:39:08 +0530

உடலளவிலும் பிரதிவாதி கொடுமைப்படுத்தியதுடன் 2 மாத காலத்தில் ஒரு முடிவு செய்வதாகக் கூறி வாதி மற்றும் அவரது குழந்தையை ஊருக்கு செல்லும்படி பிரதிவாதி 22.07.2022 ல் அனுப்பிவிட்டார்.

ஈ)வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே கணவன் மனைவி என்ற ஒற்றுமை இல்லாமல் இருந்து வந்த காரணத்தினால் வாதி பிரதிவாதியுடன் பேசி முடிவு செய்ததன் அடிப்படையில் கணவர் மனைவியாக சேர்ந்து வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டு உள்ளதால், முஸ்லீம் சட்டப்படி மனைவிக்கு இருக்க கூடிய உரிமையான குலா என்ற திருமண முறிவு முடிவு செய்து 11.09.2023 ல் எழுத்து மூலமாக பிரதிவாதி, பாளையங்கோட்டை சாந்தி நகர் மற்றும் செய்துங்கநல்லூர் ஜமாத் தலைவர்களுக்கு பதிவு தபால் மூலமாக கடிதம் அனுப்பப்பட்டு மேற்படியார்களால் 13.09.2023 ல் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

உ)செய்துங்கநல்லூர் ஜமாத்தில் இருந்து 25.09.2023 ம் தேதி வாதிக்கு அனுப்பிய கடிதத்தில் பிரதிவாதி வேறொரு பெண்ணுடன் தொடர்பில் இருப்பது உண்மை என்றும் பிரதிவாதி வாதியோடு வாழ விருப்பம் இல்லை என்றும் வாதிக்கு பஸ்க் உரிமை (பிரிந்து வாழும் உரிமையை) 27.09.2023 ல் வழங்கி விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வாதியின் கடவுச் சீட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு நீதிமன்றம் மூலமாக உத்திரவு பெற்ற பின்னர் தான் பெயர் மாற்றம் செய்ய முடியும் என்று அங்குள்ள அலுவலர் வாய்மொழியாக தெரிவித்தார். வாதிக்கும், பிரதிவாதிக்கும் நடைபெற்ற திருமணம் ஊர்ஜிதத்தில் இல்லாத காரணத்தினால் அதை அனுசரித்து வாதிக்கும், பிரதிவாதிக்கும் 28.12.2011 ல் நடைபெற்ற திருமண உறவை இரத்து செய்தும் முஸ்லீம் முறைப்படி குலா என்றும் திருமண முறிவை 11.09.2023 ம் தேதி வழங்கியது சட்டப்படியானது என விளம்புகை பரிகாரம் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆகவும், அப்துல் கரீம் என்பவர் வா.சா.2 ஆகவும், விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தோன்றாத் தரப்பினராகி உள்ளார். பிரதிவாதிக்கு



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.23 18:39:11 +0530

சாதாரண நடைமுறையில் அறிவிப்பு சார்வு ஆகாத நிலையில் மாற்றுமுக சார்வு முறையில் நாளிதழ் வாயிலாக அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் பிரதிவாதி முன்னிலையாகாமல் தோன்றாத் தரப்பினர் ஆகியுள்ளார்.

**<u>4.தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை</u>**

வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கதா? அல்லது இல்லையா? என்பது தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

**<u>தீர்வு</u>**

5.வாதிக்கும், பிரதிவாதிக்கும் கடந்த 28.12.2011ம் தேதி செய்துங்கநல்லூர் மகாலெட்சுமி மஹாலில் வைத்து திருமணம் நடைபெற்றுள்ளது என்று வா.சா.ஆ.1 திருமண அழைப்பிதழ் மூலம் உறுதியாகிறது. மேற்படி திருமணத்தின் போது வாதியும், பிரதிவாதியும் எடுத்துக் கொண்ட புகைப்படம் வா.சா.ஆ.2 ஆகும். மேற்படி திருமணம் செய்துங்கநல்லூர் முகைதீன் ஆண்டவர் ஜாமியா பள்ளிவாசல் திருமண பதிவு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று வா.சா.ஆ.2 திருமண சான்றிதழ் உறுதிபடுத்துகிறது. மேற்படி திருமணத்தின் பயனாக வாதிக்கும், பிரதிவாதிக்கும் 01.10.2012ம் தேதி முகமது இர்ஷாத் எனும் ஆண் குழந்தை பிறந்துள்ளது என்று வா.சா.ஆ.6 பிறப்பு சான்றிதழ் உறுதிப்படுத்துகிறது. திருமணத்தின் தொடர்ச்சியாக வா.சா.ஆ.4 வாக்காளர் அடையாள அட்டையில் பிரதிவாதி பெயர் வாதியின் கணவர் பெயராக குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 வாதியின் ஆதார் அட்டை மற்றும் வா.சா.ஆ.5 நிரந்தர கணக்கு எண் அட்டையில் வாதியின் தந்தை பெயர் இடம் பெற்றுள்ளது.

6.11.09.2023 தேதியிட்டு வாதி பிரதிவாதிக்கு வா.சா.ஆ.7 குலா எனும் விவாகரத்து அறிவிப்பினை அனுப்பியுள்ளார். அதன் நகலினை பாளையங்கோட்டை சாந்தி நகர் மற்றும் செய்துங்கநல்லூர் ஜமாத் தலைவர்களுக்கும் அனுப்பியுள்ளார். வா.சா.ஆ.7 ஐ மேற்படியார்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டைகள் வா.சா.ஆ.8 ஆகும். வா.சா.ஆ.7 ஐ தொடர்ந்து பிரதிவாதி வேறொரு பெண்ணுடன் தொடர்பில் இருப்பது



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.23 18:39:14 +0530

உண்மை என தெரிய வருவதாகவும், எனவே, பிரிந்து வாழும் உரிமையை(பஸ்க்) அளிப்பதாகவும் குறிப்பிட்டு செய்துங்கநல்லூர் ஜமாதில் இருந்து வா.சா.ஆ.9 வாதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. வா.சா.ஆ.10 வாதியின் கடவுச் சீட்டில் வாதியின் கணவர் பெயராக பிரதிவாதியின் பெயர் இருந்து வருகிறது.

7.பிரதிவாதி வேறு பெண்ணுடன் தொடர்பு வைத்துக் கொண்டு வாதியுடன் வாழ மறுத்ததாலும், குடும்ப பராமரிப்பு செலவிற்காக எந்தவித ஜீவனாம்சமும் தராமல் பிரிந்து வாழ்ந்து வந்ததாலும் வாதிக்கும், பிரதிவாதிக்கும் 28.12.2011ல் நடைபெற்ற திருமண உறவினை குலா(திருமண ரத்து) கொடுப்பதாக 11.09.2023ம் தேதியில் வா.சா.ஆ.7 அறிவிப்பினை அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பிற்கு பிறகும் வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையில் திருமண உறவு இருந்து வருவதற்கான சாட்சியம் எதுவும் இல்லை. வா.சா.1ன் சாட்சியத்தை உறுதியூட்டும் வகையில் வா.சா.2 அப்துல் கரீமின் சாட்சியம் அமைந்துள்ளது. மேற்படி குலாவினை மறுக்கும் வகையிலான சாட்சியம் எதுவும் இல்லை.

8.இஸ்லாமிய சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டு ஷரீயத் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டுள்ளபடி திருமணத்தை கலைப்பதற்கான 4 முக்கிய வடிவங்களில் குலா எனும் முறையும் உள்ளடங்கும் என்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் **முகமது சைஃப் பாஷா எதிர் மதிஹா ஆரிப் CRP(NPD) No.161/2021** எனும் முன் தீர்ப்பில் சொல்லியுள்ளது. வா.சா.ஆ.7ன் கீழான குலாவினை உறுதிப்படுத்தும் வகையில் வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையேயான திருமணத்தினை பதிவு செய்த செய்துங்கநல்லூர் முகைதீன் ஆண்டவர் ஜாமியா பள்ளிவாசலில் இருந்து வாதிக்கு 25.09.2023ம் தேதி வா.சா.ஆ.9 கடிதம் ஃபஸ்க்(Faskh) பிரிந்து வாழும் உரிமையை அளிப்பதாக அனுப்பப்பட்டுள்ளது.

9. மேலும், குலாவின் அடிப்படையில் திருமணத்தை கலைத்து உத்தரவிடுவது குறித்து **முகமது ரஃபி எதிர் தமிழ்நாடு அரசு WP No.35688/2019 நாள் 11.01.2023** வழக்கிலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டுள்ளது. மேற்படி முன்



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.23 18:39:17 +0530

தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ளது போல் வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே நடைபெற்ற திருமணத்தை கலைத்து உத்தரவிடுவதற்கான அதிகாரவரம்பு கொண்ட குடும்ப நல நீதிமன்றம் இந்நீதிமன்ற அதிகாரவரம்பிற்குட்பட்ட பகுதியில் இல்லாத நிலையில் விளம்புகை பரிகாரம் வழங்குவதற்கான வழக்கினை விசாரிப்பதற்கு இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு உள்ளது. மேலும், முஸ்லீம் திருமண கலைப்பு சட்டம், 1939 பிரிவு 2(ix)–ன் கீழ் முஸ்லீம் சட்டப்படி திருமணமான முகமதியப் பெண் திருமணத்தை கலைத்து உத்தரவு பெறுவதற்கு குலா ஒரு காரணமாக அமைகிறது.

10.தாவா வழக்கானது வாதிக்கும் பிரதிவாதிக்கும் கடந்த 28.12.2011ம் தேதி இந்நீதிமன்ற அதிகார வரம்பிற்குட்பட்டட செய்துங்கநல்லூர் மகாலெட்சுமி மஹாலில் வைத்து நடைபெற்ற திருமணமானது 11.09.2023ம் தேதியிட்ட வா.சா.ஆ.7 மூலம் குலா கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி 11.09.2023ம் தேதி வாதி வழங்கிய குலா சட்டப்படியானது என விளம்புகை செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலே விவாதித்துள்ள காரணங்களின் அடிப்படையில், வாதி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக 11.09.2023ம் தேதிய குலா சட்டப்படியானது என்று வாதியால் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே, தாவா வழக்கு அனுமதிக்கத்தக்கது என்று தீர்மானிக்கிறது.

**11.முடிவாக,**

**வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டு வாதிக்கும், பிரதிவாதிக்கும் 28.12.2011ல் நடைபெற்ற திருமணத்தின்படியான உறவினை ரத்து செய்து முஸ்லீம் முறைப்படி 11.09.2023ம் தேதி வழங்கிய குலா சட்டப்படியானது என விளம்புகை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.



HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.03.23 18:39:21 +0530

TNTT080000722024

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.23 18:39:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

வாதி தரப்பு சாட்சி:

வா.சா.1 –செய்யது அலி பாத்திமா
வா.சா.2– அப்துல் கரீம்

வாதி தரப்பு சான்றாவணங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | 28.12.2011 | வாதிக்கும், பிரதிவாதிக்கும் நடந்த திருமணத்தின் அழைப்பிதழ் |
| 2 | வா.சா.ஆ.2 | – | மேற்படி திருமணத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படம் |
| 3 | வா.சா.ஆ.3 | – | வாதியின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| 4 | வா.சா.ஆ.4 | – | வாதியின் வாக்காளர் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| 5 | வா.சா.ஆ.5 | – | வாதியின் நிரந்தர கணக்கு அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| 6 | வா.சா.ஆ.6 | – | வாதியின் மகன் முகமது இர்ஷாத்தின் பிறப்பு சான்றிதழ் உண்மை நகல். |
| 7 | வா.சா.ஆ.7 | – | வாதிக்கும் பிரதிவாதிக்கும் நடந்த் திருமண உறவை இஸ்லாமிய முறைப்படி ரத்து செய்து குலா என்னும் திருமண முறிவு கடிதம்அனுப்பியதற்கான நகல் மற்றும் அஞ்சல் ரசீது |
| 8 | வா.சா.ஆ.8 | – | வாதி அனுப்பிய திருமண முறிவு கடிதத்தை பிரதிவாதி மற்றும் செய்துங்கநல்லூர் ஜமாத், சாந்தி நகர் ஜமாத் ஆகியோர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் எண்ணம் 3 |
| 9 | வா.சா.ஆ.9 | 25.09.2023 | செய்துங்கநல்லூர் முகைதீன் ஆண்டவர் ஜாமியா பள்ளிவாசல் ஜமாத் தலைவர் வழங்கிய கடிதத்தின் அசல் |
| 10 | வா.சா.ஆ.10 | | வாதியின் கடவுச்சீட்டு நகல் அசலுடன் ஒப்பீடு |



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.23 18:39:23 +0530

TNTT080000722024

| | | | |
|---|---|---|---|
| | | | செய்யப்பட்டது. |
| 11 | வா.சா.ஆ.11 | | வாதியின் திருமண பதிவு புத்தகத்தின் உண்மை நகல் |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் –</u>இல்லை

<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u> –இல்லை

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.23 18:39:33 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

TNTT080000722024

மாவட்ட உரிமையியல் நீதிபதி.
ஸ்ரீவைகுண்டம்.
வரைவு/சீரான – தீர்ப்புரை
அசல் வழக்கு எண்.66/2024
நாள்.23.03.2026